சார்பு நீதிமன்றம், மேலூர்
நாள்: 05.11.2025
வா.சா.1 – பஜ்லுான் பீவி D/o.சம்சுதீன்
O.S. No.104/2022
(சாட்சி மனுவின் பேரில் திரும்ப வரவழைக்கப்பட்டு சத்திய பிரமாணத்தின் பேரில் விசாரணை செய்யப்பட்டார்.)
**2, 4** முதல் **7** பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை **:**

பர்வீன் பானு என் அண்ணன் மனைவி அவர் தற்போது உயிருடன் இருக்கிறார் என்றால் சரிதான். சம்சுதீன் மற்றும் சாகிதா பீவி என்னுடைய பெற்றோர்கள் ஆவர். மேற்படி சம்சுதீன் மற்றும் சாகிதா பீவியுடைய வாரிசுதாரர் சான்றிதழை தான் நான் நீதிமன்றத்தில் குறியீடு செய்துள்ளேன். மஸ்தான் அலி என் அண்ணன் அவர்களுடைய வாரிசுகள் நானும், மைனர் சேக் அப்துல்லா என்பதை நிருபிக்க வாரிசுதாரர் சான்றிதழ் தாக்கல் செய்திருக்கிறேனா என்றால் இல்லை. மஸ்தான் அலி அவருடைய பணிஓய்வு பலன்களையும், பணிக்கொடையையும் அவரது வாரிசுதாரரர்களான மனைவி மக்களுக்கு தான் கொடுக்க முடியும் என்றும் நாங்கள் அதை பெறமுடியாது என்றால் சரியல்ல. என்னுடைய அண்ணன் மனைவியை அவர் முத்தலாக் முறைப்படி விவாகரத்து செய்துவிட்ட படியால் அவர் மனைவி அல்ல என்று விளம்புகை செய்யும் படி நான் இந்த வழக்கில் கோரியிருக்கிறேன் என்றால் சரிதான். 1ம் பிரதிவாதியான பர்வீன் பானு, என் அண்ணன் மஸ்தான் அலி உயிருடன் இருந்த காலத்தில் அவர் மனைவி அல்ல என்றோ, அல்லது விவாகரத்து கோரியோ நீதிமன்றத்தின் மூலம் வழக்கு தாக்கல் செய்து பிரிந்தார்களா என்றால் இல்லை. (பிரதிவாதிகள் 1 மற்றும் 3 ஆகியோர் 2,4 முதல் 7 பிரதிவாதிகளின் குறுக்கு விசாரணயை ஏற்றுகொள்கிறார்கள். )
மறுவிசாரணை : இல்லை.

SAMUNDESWARIPRABHA
Digitally signed by SAMUNDESWARIPRABHA
Date: 2025.11.05 21:33:57 +0530

Sub Judge

Melur